# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# கர்த்தருடைய அன்பினால் நாங்கள் தாழ்மையோடு ஊழியபணி செய்கிறோம்

## 2018 போதகர்கள் சபை பணியாளர்கள் அர்ப்பண ஆராதனை









போதகர்கள் மற்றும் திருச்சபை பணியாளர்களுக்கான அர்ப்பண ஆராதனை, பிப்ரவரி 18, 2018 அன்று ஞாயிறு மாலை ஆராதனையில் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களோடு நடை–பெற்றது.

போதகர்கள், லேவி பணியாளர்கள் (முழு நேர திருச்சபை பணியாளர்கள்), மூப்பர்கள், மூத்த கண்காணியைகள், கண்காணிகள், கண்காணியைகள், இளம் கண்காணிகள், இளம் கண்–காணியைகள், எஸ்தர் குழுவினர் (போதகர்களின் மனைவிகள் அடங்கிய குழு) மற்றும் ஜெப அர்ப்பணிப்பாளர்கள் குழுவினரை சேர்த்து மொத்தம் 9,477 பேர் அர்ப்பணிப்பாளர்களாய் பங்குப்பெற்றனர். க்வங்ஜூ, தேஜியோன், மாசான், பூசான், யொசு, சங்வொன் மற்றும் ச்சன்சியொன் உட்பட கொரியாவிலுள்ள 43 கிளைசபைகளும் இந்த ஆராதனையில் பங்குப்பெற்றனர்.

அறிவர். ஜேராக் லீ அவர்கள் ரோமர் 5:8ம் வசனத்தின் அடிப்படையில், “மேய்ப்பருடைய இருதயம்” என்ற தலைப்பிலே செய்தியை வழங்கினார்.

கர்த்தருடைய இருதயத்தோடு ஆத்துமாக்களைப் பராமரிப்பதும், தேவனுடைய இருதயத்தோடு தேவராஜ்யத்தை விரிவுப்படுத்துவதுமே மேய்ப்பரின் இருதயம் என்ற விளக்கத்தோடு அவர் செய்தியை பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

இந்த இருதயத்தை அடைவதற்கு மூன்று வழிகள் உள்ளன என விளக்கினார்: முதலாவது, தேவ ராஜ்யத்திற்காக ஒருவருடைய வாழ்க்கையை விட்டு கொடுப்பது; இரண்டாவது, ஆத்துமாக்களை விலையேறப் பெற்றவர்களாக கருதுவது; மூன்றாவது, உக்கிராணக்காரரின் இருதயத்தோடு தேவன் கொடுத்த கடமைகளை அமைதலோடு நிறைவேற்றுவதாகும்.

இந்த கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் கருவியாக மாறி கணக்கற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவதற்காக, தன் உயிராக ஆத்துமாக்களை நேசிக்கிற மேய்ப்பரின் இருதயத்தை அடையப்பெற்று, தாழ்மையோடும் உண்மையோடும் தங்கள் ஊழிய கடமைகளை நிறைவேற்ற, அர்ப்பணிப்பாளர்கள் மீண்டும் தங்கள் மனதில் உறுதியான தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள்.

## இந்தி பேசும் GCN நேயர்களுக்கான கருத்தரங்கு



பிப்ரவரி 6, 2018 அன்று, இந்தி பேசும் GCN நேயர்களுக்கான கருத்தரங்கு இந்தியாவிலுள்ள டெல்லி மான்மின் திருச்சபையில் (போதகர் ஜான் கிம்) நடைபெற்றது. அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்கள் சுபசண்தீஸ் அலைவரிசை மற்றும் யுடியுபில் இந்தி ஒலிச்சேர்க்கை (டப்பிங்) செய்யப்பட்டு ஒளிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும் நேயர்களின் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தால் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில், 1,500 கி.மீ தூரமுள்ள ஜார்க்கண்ட், பஞ்சாப், உத்திர பிரதேசம், ஹரியானாவிலிருந்து ஏறக்குறைய 70 போதகர்–களும், விசுவாசிகளும் பங்குப்பெற்றனர்; போதகர் ஜான் கிம் அவர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வல்லமையான ஊழியத்தைக் குறித்தும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கான, பதிலைப் பெறுவதற்கான திறவுகோல்களைக் குறித்தும் பிரசங்கித்தார். அவர்களின் சாதகமான பதில்–களால் அவர்களுக்கு தொடர்ச்சியாக கருத்–தரங்குகளை நடத்த திருச்சபை தீர்மானித்தது.

அதிக தாக்கமுள்ள ஊழியத்தை நிறைவேற்ற, இந்தியாவின் தேசிய மொழியான இந்தியில் ஒலிச்சேர்க்கை செய்யப்பட்ட அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை இந்தியாவிலுள்ள GCN நேயர்களுக்கு டெல்லி மான்மின் திருச்சபை வழங்கி வருகிறது.

### விசுவாசிகள் பதிலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டனர்

## சிறப்பு தானியேல் ஜெபக் கூட்டம்

மான்மின் ஜெப மையத்தின் தலைவர் போக்னிம் லீ அவர்களின் நடத்துதலின்கீழ் “2018ம் ஆண்டின் ஏழு தலைப்புகள்” என்ற கருப்பொருளின்கீழ் பிப்ரவரி 26 முதல் ஏப்ரல் 8, 2018 வரை சிறப்பாய் நடைபெற்று முடிந்தது.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# தேவனுடைய வார்த்தையால்

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபிரெயர் 11:6).

தேவனை விசுவாசிக்கிறேன் என்று நீங்கள் சொல்லுவதினால், தேவனுடைய கிரியைகள் நடைபெற்றுவிடாது. காணக்கூடாதவற்றை கண்டு, நீங்கள் நம்பிக்கை வைத்த அசைக்கமுடியாத காரியங்களை அடையும் மட்டுமாய் உங்கள் விசுவாசத்தின் கிரியைகளை வெளிப்படுத்தும் வழிமுறையினூடே நீங்கள் செல்ல வேண்டும்.

எபிரெயர் 11வது அதிகாரம், தேவனுடைய வார்த்தை என்கிற பாதையை பின்பற்றினதால், தேவனுடைய ஆசீர்வாதங்களையும், பதில்களையும் பெற்றுக்கொண்ட விசுவாசத்தின் முற்பிதாக்களைப் பற்றி விவரிக்கும் அதிகாரமாகும். ஆபேல், ஏனோக்கு மற்றும் நோவா ஆகியோரின் உதாரணங்களின் மூலமாக தேவனுடைய வார்த்தையின்படி பூரணமாக வாழக்கூடிய விசுவாசத்தைப் பார்க்கவிருக்கிறோம்.

## 1. தேவனுடைய வார்த்தையின்படி செயல்பட்ட விசுவாசத்தின் முற்பிதாக்கள்

### 1) விசுவாசத்தினால் ஆபேல் தான் நீதிமான் என்று சாட்சிப்பெற்றான்.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய வார்த்தையை தங்கள் மனதில் வைப்பதில் தோல்வியடைந்து, கீழ்ப்படியாமல்போனதின் விளைவாக அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து இந்தப் பூமிக்கு அனுப்பப்பட்டனர். இதனால் தான் தங்களுடைய அன்பு பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தையை கருத்தாய்ப் போதித்தனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளிடம் பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெறுவதற்கு மிருகத்தை கொன்று அதன் இரத்தத்தை பலியாக (ரோமர் 6:23; எபிரெயர் 9:22) ஏறெடுக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக சொல்லி வளர்த்தனர்.

எப்படியிருந்தாலும், அநேக வருடங்கள் உருண்டோடிய பிறகு, அவர்களின் மகன் காயீன் நிலத்தின் கனியை தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வந்தான். ஆபேல் தொடர்ச்சியாக தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவனாய், இரத்தப் பலியாக தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்து செலுத்தினான். இதனால், ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கீகரித்தார், காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. காயீன் தன் சகோதரனாகிய ஆபேல் மேல் எரிச்சலடைந்து, முடிவாக அவனைக் கொன்று விடுகிறான். இதைக் குறித்து எபிரெயர் 11:4ல் வாசிக்கிறோம், "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்." பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட பலிகள் இந்த நாட்களில் திருச்சபையின் அனைத்து ஆராதனைகளுக்கும் ஒப்பாக உள்ளன. அந்த நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின்படி பலிகளை செலுத்தினதுபோல, நாமும் தேவனுடைய சித்தத்தின்படி ஆராதனைகளை ஏறெடுக்க வேண்டும் (ரோமர் 12:1; யோவான் 4:24).

இன்றைய நாட்களில், அநேக விசுவாசிகள் காயீன் செலுத்தின பலியைப்போல தேவன் அங்கீகரிக்காத ஆராதனைகளை ஏறெடுத்துக் கொண்டு வருகின்றனர். அவர்கள் பாடினாலும், ஜெபித்தாலும் அவை வெறும் உதடுகள் அளவே உள்ளது. இன்னும் சிலர் செய்தியை கவனமாய் கேட்பது போல இருந்தாலும், அவர்கள் சிந்தையும் மனமும் வேறெதிலோ அலைப்பாய்ந்து கொண்டிருக்கும். இன்னும் கொடுக்கும் காணிக்கையிலும் உண்மையற்றவர்களாய் இருப்பார்கள்; தங்கள் செலவுகள் போக மீதமிருந்தால் அதிலும் கடமைக்கென்றே சிலர் கொடுக்கிறார்கள் (மல்கியா 3:8). சிலர் ஞாயிறு ஆராதனையிலே பங்குப்பெற்றேன் என்று சொன்னாலும், அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப காலை அல்லது மாலை ஆராதனையில் மாத்திரம் பங்குப்பெறுகிறார்கள். இப்படிச் செய்துவிட்டு தாங்கள் கர்த்தருடைய நாளை முழுமையாகவும் பரிசுத்தமாகவும் ஆசரித்ததாக நினைக்கிறார்கள். ஆனால் காலை மாலை ஆராதனைகளில் முழுமையாகப் பங்குப்பெற்று, மற்ற எந்த உலக அலுவல்களிலும், சுபநிகழ்ச்சிகளிலும் பங்குப் பெறாமல் கர்த்தருக்கென்றே அந்த நாளை கொடுப்பதே ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பதாகும்.

ஆபேலைப் போல தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதினால் உங்களுக்கு எந்த ஒரு இழப்பும் ஏற்படப்போவதில்லை. தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வது தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான ஞானத்தின் பாதையாக உள்ளது (உபாகமம் 28).

### 2) விசுவாசத்தினால், ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவனென்று சாட்சி பெற்றான்.

முந்நூற்று அறுபத்தைந்து வருடம் தேவனோடு நடக்கும்படியாக (ஆதியாகமம் 5:21–24) போதுமான பரிசுத்தமும் பூரணமும் ஏனோக்கினிடத்தில் காணப்பட்டது. அவன் மரணத்தைக் காணாமல் உயிரோடே எடுத்துக்கொள்ளப்பட்டான். இதற்குக் காரணம், அவன் தன் இருதயத்திலுள்ள பாவங்களைக் களைந்து தன்னைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டான். ஆவிக்குரிய சட்டம் மிக நேர்த்தியானது, ரோமர் 6:23ஐ வாசிப்போமென்றால், "பாவத்தின் சம்பளம் மரணம்." ஆனால் இந்தச் சட்டம் ஏனோக்குக்கு ஏற்புடையதல்ல. காரணம் தேவ வார்த்தையின்படி தன் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் நடக்கிறவனாய் இருந்தான். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததன் மூலமாக பரிசுத்தத்தையும் பெற்றுக்கொண்டான். தேவனுக்குப் பிரியமானவனென்று சாட்சியும் பெற்றுக்கொண்டான்.

சில விசுவாசிகள், தேவனுடைய வார்த்தை அனைத்திற்கும் கீழ்ப்படிந்து பாவங்களை முற்றிலும் விட்டு விலகி பரிசுத்தமாக வாழ்வது எப்படி சாத்தியமாகும் என்று சொல்வதுண்டு. ஆனால் பாவங்களை களைந்து, அவரைப்போல பூரணர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும் நாம் மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1பேதுரு 1:15; மத்தேயு 5:48). நீங்கள் தேவனை நேசிப்பது உண்மையாக இருக்குமென்றால், அவருடைய வார்த்தையின்படி உங்களால் வாழாமல் இருக்க முடியாது (யோவான் 14:21). நீங்களும் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஏனோக்கைப் போல தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்தால், தேவனுக்குப் பிரியமானவர்களாக நீங்களும் சாட்சி பெற முடியும்.

### 3) விசுவாசத்தினால், நோவா நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

ஆதாமும் ஏவாளும் தங்கள் பாவத்தினால் ஏதேன் தோட்டத்திலிருந்து பூமிக்கு அனுப்பப்பட்டு வாழத்தொடங்கிய 1,500 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பூமியானது பாவத்தினாலும் தீமையினாலும் முழுமையாக நிறைந்து காணப்பட்டது. அந்தப் பொல்லாத சந்ததியாருக்குள், நோவா உலகத்தினால் தன்னை கறைப்படுத்தாமல், தேவனுக்குப் பயந்தவனாய் காணப்பட்டான் (ஆதியாகமம் 6:9). ஆகவே, தேவன் அவன் மூலமாக பூமியை புதிதாக்க திட்டமிட்டார்.

தேவன் ஜலப்பிரளய நியாயத்தீர்ப்பிலிருந்து நோவாவையும், அவன் குடும்பத்தையும் காப்பாற்றி, பலுகிப் பெருகும்படியாக திட்டம் வைத்தார். நோவாவின் மூலமாக ஒரு பெரிய பேழையை உண்டாக்கி, அதிலே நோவாவின் குடும்பத்தாரும் அனைத்து உயிரினங்களும் காப்பாற்றப்படும்படியாக திட்டம் வைத்தார் (ஆதியாகமம் 6:13–22).

நோவா பேழையை கட்டின பொழுது, அவன் ஜனங்களைப் பார்த்து மனந்திரும்பி வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படும்படி ஒவ்வொரு நாளும் உரக்க எச்சரித்தான். அவர்கள் இன்னமும் பாவம் செய்துகொண்டு, மனந்திரும்புவதற்குப் பதிலாக அவனைப் பார்த்து நகைத்தனர். மழையே வரவில்லை இவ்வளவு பெரிய பேழையை கட்டுகிறானே என்று அவனை கேலிசெய்தனர். நியாயத்தீர்ப்பை தடுக்க முடியாதபடிக்கு அவர்கள் பாவங்கள் பெருகிவிட்டபோதும், அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகி, நியாயத்தீர்ப்பை பெறாதபடிக்கு, தேவன் இன்னமும் ஏழு நாட்களை கொடுத்தார். ஆனால் நோவாவின் குடும்பம் தவிர வேறு யாரும் மனந்திரும்பாத காரணத்தால், ஜலப்பிரளயத்தில் சிக்கி மரித்துப்போனார்கள்.

இதேபோல, தேவனுடைய வார்த்தையின்படி வாழ முயற்சிக்கும்போது, மக்கள் உபத்திரவங்களையோ கஷ்டங்களையோ சந்திக்கலாம். முதலாவது, அவைகளை மேற்கொள்வது அவர்களுக்கு கஷ்டமாய் இருக்கலாம். இதனால் அவர்களில் சிலர் அந்த முயற்சியை விட்டுவிட்டு உலகத்தோடு ஒன்றிணைந்து பாவம் செய்யலாம்; அல்லது நாட்கள் நகர அல்லது சூழ்நிலை மிகவும் மோசமாகும்போது தேவனைவிட்டு கூட பின் வாங்கிப் போகலாம்.

சூழ்நிலைகள் நஷ்டத்தை உண்டாக்கும்போது, மக்கள் ஆவியின் நிறைவை இழந்து, ஜெபிப்பதை விட்டுவிட்டு, தேவன் அவர்களுக்கு தந்த கடமையை அவமதித்து விடலாம். முடிவு மட்டும் தேவனுடைய வார்த்தையை பயிற்சி செய்வதில் தோல்வியடையலாம். எப்படியிருந்தாலும், நீங்கள் உபத்திரவம் மற்றும் அவமானங்கள் மத்தியிலும், மாறாமல் வசனத்தின்படி வாழ முயற்சி செய்யும்போது மட்டுமே தேவனுடைய அன்பையும் அநுகிரகத்தையும் பெற்று, ஆசீர்வாத பாதையில் சென்றிட முடியும்.

## 2. தேவனுடைய வார்த்தையின்படி பூரணமாக வாழ்வதற்கான விசுவாசத்தை பெறுவதற்கு

### 1) தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கச் செய்யும் தர்க்கங்களையும், மேட்டிமையான எண்ணங்களையும் அகற்றிட வேண்டும்.

இதை நீங்கள் செய்வதற்கு முதலாவதாக, இருதயத்தில் உள்ள தீமைகளை அகற்றிட வேண்டும். அதாவது தீமைகள் என்னப்படும் இறுமாப்பு, பெருமை, இருதய கடினம், வஞ்சகம் இன்னும் இருதயத்திலுள்ள தீய குணங்களை அகற்றிட வேண்டும். தேவனுடைய வார்த்தையை சந்தேதிக்கும்படியாக செய்யும் தர்க்கங்களையும், மேட்டிமையான எண்ணங்களையும் அகற்றுவது சுலபமான காரியமல்ல. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாதபடி உங்கள் இருதயத்தில் குழப்பங்கள் ஏற்படுமென்றால், நீங்கள் உடனே உங்கள் சிந்தையையும், உங்கள் அறிவையும் பரிசோதித்துப் பார்த்து, தேவனுடைய வார்த்தையின்படி நடக்கிறபோது, இருதயத்தில் அவரை விசுவாசிக்கும்படியான கிருபையை தேவன் உங்களுக்குத் தருவார்.

### 2) தேவனுடைய வார்த்தையை வாசிக்கவும், கேட்கவும் கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

ரோமர் 10:17 சொல்கிறது, "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." தேவனுடைய வார்த்தையை நீங்கள் கேட்டு, அதை வாழ்க்கைக்கு அப்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுது தேவ சித்தத்தை அறிந்து அதற்கு நீங்கள் கீழ்ப்படிய முடியும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளாக இருக்கிற தேவனுடைய வார்த்தையை நினைப்பூட்டி, ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படியும்படியாக உதவிச் செய்வார். நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள் (ஏசாயா 1:19). தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் இருக்கையில் அதற்கு நீங்கள் கீழ்ப்படிவதினால் எல்லாவற்றிலும் நீங்கள் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று அனுபவிக்க முடியும்.

### 3) தேவனுடைய வார்த்தைக்கு செயலினால் கீழ்ப்படிய வேண்டும்.

எத்தனை செய்திகளை நீங்கள் கேட்டாலும், அதை மூளையில் வைத்து, அதன்படி வாழாவிட்டால், எந்த ஒரு பயனும் இல்லை (யாக்கோபு 2:22,26). எனவே கேட்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கு அதாவது செய், செய்யாதே, கைக்கொள், விட்டு விலகு இவைகளுக்கு உங்கள் சுய சிந்தையை பயன்படுத்தாமல் முற்றிலுமாய் கீழ்ப்படிவதினால், தேவன் உங்கள் விசுவாசத்தை அங்கீகரிப்பார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரைப் பிரியப்படுத்த, அவரிடத்தில் கேட்பவைகளுக்கு பதிலை எப்பொழுதும் பெற்றுக்கொண்டு அவருடைய சித்தத்தின்படி வாழ ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

## விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

# ஒருமனதின் ஜெபம்

நீங்கள் சிலசமயம் தனித்து ஜெபித்தாலும், ஜெபத்திலே ஒருசிலரோடு சேர்ந்து ஒருமனமாய் ஜெபிப்பது நீங்கள் கேட்பவைகளை பெற்றுக்கொள்ள எளிதாக்கிவிடும். ஒருமனமாய் ஜெபிப்பதென்றால் என்ன, அதை எப்படி செய்வது என்பதை அறிந்துகொண்டு, ஒருமனதின் ஜெபத்தை ஏறெடுத்து அதனால் வல்லமையான கிரியைகளை அனுபவிப்போமாக.

## ஒருமனதின் ஜெபம் என்றால் என்ன?

மத்தேயு 18:19 சொல்கிறது, “அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” இங்கு, இரண்டு பேர் ஒருமனமாய் ஜெபிப்பதில் தேவன் எவ்வளவு பிரியமாய் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்கிறோம்.

இங்கு, இரண்டு பேர் ஒருமனமாய் ஜெபிப்பது என்பது பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து, கர்த்தருடைய நாமத்தினால் தேவனை நோக்கி ஜெபிப்பதாகும் (யூதா 1:20). மற்றொரு வார்த்தையில் சொல்வேனென்றால், பரிசுத்த ஆவியானவரின் இருதயத்தோடு இணைந்து, ஒருமனமாய் ஜெபிப்பதாகும். இப்பேற்பட்ட ஜெபத்திற்கே கர்த்தரால் கிரியை செய்ய முடியும். இதுவே தேவனிடத்திலிருந்து பதில்களை சீக்கிரம் பெறச் செய்யும் வல்லமையான ஜெபமாகும்.

இதுபோன்ற ஜெபத்தை ஏறெடுப்பதற்கு, முதலாவது நாம் ஆவிக்குரிய இருதயத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய இருதயத்திலிருந்து சத்தியமற்ற குணங்கள், பாவங்கள் மற்றும் தீமைகளை எந்த அளவிற்கு அகற்றுகின்றோமோ, அந்த அளவிற்கு பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை தெளிவாக உணர்ந்து, ஆவிக்குரிய இருதயத்தை அதிகமாய் நிறைவேற்ற முடியும்.

நாம் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிந்து வரும்போது, அவருடைய நிறைவையும் உந்துதலையும் பெற்று, அவரோடு அதிகமாய் ஐக்கியமாக முடியும். நீங்கள் அவரோடு அதிகமாக ஐக்கியப்படும்போது, உங்களுடைய மாம்சீக எண்ணங்களோ அல்லது உங்களுடைய பேராசைகளோ உங்கள் ஜெபத்திற்கு தடையாக இருக்க முடியாது.

எனவே, நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் விருப்பத்தோடு சத்தியத்தில் ஜெபித்தால், தேவனுடைய வழியில் உங்கள் வாழ்க்கையில் அனைத்தும் நடைபெறும். நீங்கள் சோர்வாய் இருந்தாலும்கூட, அவரோடு ஐக்கியத்தில் இருப்பதால் ஆவியின் நிறைவைப் பெற்று, சோர்வை மேற்கொண்டு, தேவனோடு ஆழமாய் தொடர்புகொள்ள முடியும். இந்த வகையிலான ஜெபம் ஆவிக்குரிய ரீதியில் ஒருமனதின் ஜெபமாக இருக்கிறது.

## நாம் ஆவியில் ஒருமனமாய் ஜெபிப்பது எப்படி?

நீங்கள் பரிசுத்த ஆவியானவரோடு ஒருமனமாய் ஜெபிக்கும்போது, தேவன் அதில் பிரியப்பட்டவராய் பெரிதான ஆசீர்வாதத்தோடு பதில் தருவார். ஏனென்றால், அது பரிசுத்த ஆவியானவரோடு ஒன்றிணைந்த ஜெபமாக இருக்கிறது. இதுபோன்ற ஒருமனதின் ஜெபத்தின்மூலம், நீங்கள் தேவனிடத்திலிருந்து பதில்களைப் பெற்று, ஜீவனுள்ள தேவனுக்குச் சாட்சியாக இருக்க முடியும்.

நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவதின்மூலம் அவரோடு ஒருமனதாய் ஜெபிக்க முடியும் (எபேசியர் 6:8). பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய இருதயமாகவே இருக்கிறார், எனவே அவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார் (1 கொரிந்தியர் 2:10). அவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:27). நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஜெபித்தால் மட்டுமே உங்களால் தேவ சித்தத்தின்படி ஜெபிக்க முடியும். அப்பொழுது தேவன் உங்களது ஜெபத்திற்குப் பதிலளித்து, உங்களது இருதய விருப்பங்களை நிறைவேற்றுவார்.

நீங்கள் ஒரு புதிய விசுவாசியாக அல்லது தொடர்ச்சியாக ஜெபிக்கிற பழக்கமில்லாதவர்களாய் இருந்தால் பரிசுத்த ஆவியானவரோடு ஒருமனமாய் ஜெபிப்பது உங்களுக்கு கடினமாக இருக்கும். நீங்கள் உங்கள் சுய சிந்தையோடும், உங்கள் சொந்த வழியிலும் ஜெபிப்பீர்களென்றால், ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த நிலையில் வேறு சிந்தைகள் ஆட்கொள்ளும், தூங்கியும் விடுவீர்கள். உங்களது ஜெபம் அர்த்தமற்றதாக இருப்பதால், என்ன ஜெபித்தீர்கள் என்பதையும் மறந்துவிடுவீர்கள்.

ஆரம்பத்திலேயே பரிசுத்த ஆவியோடு யாராலும் பூரணமாய் ஜெபித்துவிட முடியாதுதான். ஆனால் நீங்கள் ஆவியிலே ஜெபிக்க முயற்சி செய்தால், தேவன் உங்கள் முயற்சியை அங்கீகரித்து, உங்களுக்கு கிருபையை அளிப்பார். அப்பொழுது, நீங்கள் நன்றாக ஜெபிக்கத் துவங்கி, முடிவிலே ஆவியிலே ஜெபிக்கிறவர்களாய் மாறிவிடுவீர்கள். நீங்கள் முன்பு சேமித்து வைத்த ஜெபங்களையும் தேவன் நினைவுகூர்ந்து, பதில்களையும் ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு அருளுவார்.

மத்தேயு 18:20ல் இயேசு, “ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.” இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியைப் பெற்ற தேவ பிள்ளைகள் ஒன்றுகூடி ஜெபிக்கும்போது, கர்த்தர் அவர்கள் இருதயத்தை பரிசுத்த ஆவியோடு இணைத்து, ஜெபத்திலே ஒருமனதோடு ஜெபிக்கும்படி நடத்துவார். அதுபோன்ற ஜெபத்திலே தேவன் பிரியப்பட்டு தம் கிரியைகளை நடப்பிப்பார்.

ஒருவேளை ஜெபிக்கிற மக்களுடைய இருதயம் ஒருமனப்படாவிட்டால், ஜெபத்தை நடத்துகிற தலைவர் ஆவியில் நிறையும்படி பாடல்களைப் பாடி, மனந்திரும்பச் செய்து, அவர்களை ஒருமனப்படுத்தவேண்டும். அவர்கள் ஒருமனதோடு ஜெபித்தால் மட்டுமே ஆவியின் நிறைவையும், மகிழ்ச்சியையும் பெற்று, பதிலைப் பெறுவோம் என்ற நிச்சயத்தை அடைவார்கள்.

## ஒருமன ஜெபத்தின் வல்லமை

ஆண்டவர் உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்ற பிறகு, ஆண்டவராகிய இயேசு வாக்களித்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனைப் பெற்றுக்கொள்ளும்படி 120 பேர் ஒருமனதோடு கூடி ஜெபித்தார்கள். அவர்கள் ஒருமனதோடு ஜெபித்ததினால், பரிசுத்த ஆவியைப் பெற்று, அந்நியபாஷையில் பேசினார்கள் (அப். 1:12–15; 2:1–4).

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்ற அந்த நாளிலே, அப்போஸ்தலனாகிய பேதுரு செய்தி கொடுத்த வேளையில், அன்றைய தினம் மூவாயிரம் பேர் இரட்சிப்பைப் பெற்று, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர்களாலும், ஆதி திருச்சபை விசுவாசிகளாலும் நடைபெற்ற அற்புதங்கள் அடையாளங்களினால் அநேக விசுவாசிகள் சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:14–47).

ஒருமனதின் ஜெபத்தினால், அவர்களால் வல்லமை நிறைந்த தேவ செய்தியை கொடுக்க முடிந்தது. ஜனங்கள் சுகமடையவும், கண்கள் திறக்கப்படவும், முடவர்கள் நடக்கவும், மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருக்கவும், சகல வியாதியுடையவர்கள் விடுதலைப் பெறவும், அசுத்த ஆவிகள் துரத்தப்படவும் அவர்களுக்கு ஒருமனதின் ஜெபம் மிகவும் பலனுள்ளதாய் இருந்தது.

நீங்கள் பரிசுத்த ஆவியில் ஒன்றிணைந்து, முழு இருதயத்தோடு ஜெபிக்கையில், உங்கள் எதிர்பார்ப்பை காட்டிலும் அதிகமாக தேவன் காலம் நேரத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் கிரியை செய்வார் (அப். 12). தேவனுடைய ராஜ்ய விரிவாக்கப் பணியிலும், போதகர்கள், திருச்சபை பணியாளர்கள், விசுவாசிகள் நீங்களும் ஒருமனதோடு ஜெபிக்க வேண்டியது மிகவும் அவசியம். எந்த அளவிற்கு ஒருமனமாய் கூடி, பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறீர்களோ அந்த அளவிற்கு பரிசுத்த ஆவியானவரின் பலத்த கிரியைகளை நீங்கள் காண முடியும்.

உங்கள் ஆசீர்வாதம் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஒருமனதின் ஜெபம் அடித்தளமாய் காணப்படுகிறது (பிரசங்கி 4:9–12). நீங்கள் தனித்தனியாக ஜெபிப்பீர்களென்றால், அந்த ஜெப தூபமும் எதிரியாகிய பிசாசாகிய சாத்தானின் வல்லமையை முறியடிக்க பெலன் குறைவாய் ஒருவேளை காணப்பட வாய்ப்புள்ளது. ஆனால் எப்பொழுது நீங்கள் ஒருமனமாய் ஜெபிக்கின்றீர்களோ அந்த ஜெபதூபம் வலிமையானதாக இருப்பதினால், உங்கள் ஜெபம் வல்லமை நிறைந்ததாய் பரலோகத்தை அசைக்கக்கூடியதாய் காணப்படும்.

தேவனுடைய ஊழியங்களுக்காய் திருச்சபைகளுக்காய் நீங்கள் ஜெபிக்கின்றபொழுது, ஒருமனதின் ஜெபம் மிகவும் அவசியம். ஒருமனதின் ஜெபத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். தேவனுடைய பணிக்காக ஒருமனதோடு ஜெபிக்கின்றபொழுது தேவன் சீக்கிரமாய் அதற்காக பதில் தருகிறார். இவ்விதமாய் நீங்கள் தேவனை பிரியப்படுத்துவதினால், உங்கள் தனிப்பட்ட விருப்பங்களுக்கும் தேவன் உடனடியாக பதில் தருவார்.

ஒருமனதின் ஜெபத்தில் எத்தனை பேர் கூடி ஜெபிக்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. ஒருமனமாய் ஜெபிக்கிறவர்கள் ஒரே இருதயத்தோடு, ஒரே நோக்கத்திற்காய் பரிசுத்த ஆவியில் ஒன்றிணைந்து ஜெபிக்கின்றபோது பதிலைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, ஒருமனதின் ஜெபத்திற்கு ஆதாரமாய் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். ஜெபத்தில் கூடிவரும் மக்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற்று, ஐக்கியப்பட்டிருப்பதையே ஒருமனதின் ஜெபம் என்று அழைக்க முடியும்.

# "வல்லமையான ஜெபத்தின்மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதமும், சுகமும் அருளப்பட்டது"

**கண்காணி க்வங்ஷிக் கிம், வயது 60,**
**20வது மாகாணம், மான்மின் தலைமை சபை**



நான் தானியேல் ஜெபக்கூட்டத்தில் இடைவிடாது ஜெபித்தேன். என் மனைவி ஒருமுறை என்னிடம் நான் ஒரு உணவு வேளையை தவிர்த்து ஜெபிக்கவும்கூடியவர் என்று சொன்னாள். 2009ம் ஆண்டு, சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தின் பரிசளிப்பு நிகழ்ச்சியின்போது, குலுக்கல் முறையில் தலைமை போதகரின் பரிசாகிய முதல் பரிசையும் பெற்றுக்கொண்டேன்.

அக்டோபர் 2017ல், என்னுடைய கழுத்தின் இடது பகுதியில் ஒரு கடினமான கட்டி இருப்பதை அறிந்த பிறகு, எளிதில் சோர்ந்துப்போனேன். எனினும் அது என்னவாக இருந்தாலும், என்னால் சுகமடைய முடியும் என்று நான் உறுதியாய் நம்பினேன். நான் தலைமை போதகரின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை ஒவ்வொரு ஆராதனையிலும் பெற்றுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் மூவான் மதுர தண்ணீரைப் (யாத்திராகமம் 15:25) பருகினேன். கட்டி மறைந்துப்போனது, வலி எப்பொழுது போனது என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை.

ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு, நவம்பர் மாதத்தில், என் கழுத்தின் இடது பகுதியில் மீண்டும் ஒரு கட்டி தோன்றியது. அந்தக் கட்டியினால் சற்று கடினத்தை உணர்ந்தேன், நான் எதையாவது உட்கொள்ளும்போது எனக்கு வலி உண்டானது. நான் பரிசோதனையை மேற்கொண்டபொழுது, மருத்துவர் என்னிடம் தைராய்டு சுரப்பியை படிப்படியாக அழித்துவிடும் தன்னெதிர்ப்பு நோயாகிய (உடலானது தன்னிலுள்ள சில பகுதிகளை நோய்க்காரணியாக தவறாக அடையாளப்படுத்தி, தனக்கு எதிராக தானே செயல்படும்) தைராய்டு வியாதி இருப்பதாக கூறினார்.

இதைக் கேட்டபொழுது, நான் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவரை சார்ந்துக்கொள்ளாததை குறித்தும், என்னுடைய ஜெபத்தில் தேவனுடைய இருதயத்தையும், அன்பையும் உணர்ந்து ஜெபிக்காததைக் குறித்தும் மனந்திரும்பினேன். இதைப் பற்றிய ஆவிக்குரிய உணர்த்துதலைப் பெற்று, நான் மனந்திரும்பிய பிறகு, நன்றாக உணர்ந்தேன். அந்த நேரம் முதற்கொண்டு நான் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் உந்துதலின்மூலமாக ஆவிக்குரிய உணர்த்துதலை அதிகமாய் பெற்றுக்கொள்ள முயற்சித்தேன். என் ஆத்துமா செழிப்பாகவும், கனிதரும் விசுவாச ஜீவியம் செய்யவும் அதிகம் முயற்சி செய்தேன். ஒவ்வொரு ஆராதனையிலும் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன்; தினமும் மூவான் அற்புத தண்ணீரைப் பருகினேன். என்னுடைய மாகாணப் போதகரும் வல்லமை நிறைந்த கைக்குட்டையால் (அப். 19:11–12) எனக்காக ஜெபித்தார். பிறகு, அந்தக் கட்டி முற்றிலும் மறைந்துப்போனது; மீண்டும் நான் நன்றாக உணர்ந்தேன். அல்லேலூயா! நம்மோடு எப்பொழுதும் இருக்கிற தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

**சகோதரி ஜிஹி லீ, வயது 23,**
**இளம் வாலிபர்கள் குழு, மான்மின் தலைமை சபை**



2016 கோடைகாலத்தில், என் கழுத்தில் ஒரு கட்டியை உணர்ந்தேன். ஆரம்பத்தில் நான் அதை பெரிதாய் எடுத்துக்கொள்ளவில்லை, ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு என்னைச் சுற்றியிருந்த மக்கள் என் கழுத்தில் ஏதோ பெரிதாக ஒன்று ஒட்டிக் கொண்டிருக்கிறது என்றார்கள். ஒரு சிறிய முட்டை அளவான கட்டி என் கழுத்துப்பகுதியில் இருந்தது.


நாட்கள் செல்லச் செல்ல கட்டி பெரிதாக மாறியது. நான் மருத்துவமனைக்குச் சென்றேன்; என் தைராய்டு சுரப்பியில் 3 செ.மீ. அளவுடைய நீர்க்கட்டி இருப்பதாக கேள்விப்பட்டேன். அது மிகவும் மோசமாகவும், இன்னும் சற்று பெரிதாக வளர்ந்தால் என் உணவுக் குழாயை அழுத்தி அடைத்துவிடும் என்றும் மருத்துவர் கூறினார். ஊசியின்மூலம் என் நீர்க்கட்டியில் இருந்த திரவத்தை எடுத்தாலும், ஒரு சில நாட்களுக்குள்ளாக மீண்டும் திரவம் சேர்ந்துவிடும்.

ஒரு சில முறை திரவத்தை எடுத்துவிட்டும், எவ்வித பயனும் இல்லை. அதுவரை அது ஒரு ஆவிக்குரிய பிரச்சனையென்று நான் கருதவில்லை. நான் விரும்புகிறதற்கு மாறாக ஒன்று நடக்கும்போது உடனடியாக நான் குறைபேசியதும், நீண்ட வருடங்களாக அர்த்தமற்ற ஜெபத்தை ஏறெடுத்ததும் ஞாபகம் வந்தது. நான் சோர்வாய் இருந்தாலும்கூட, ஒவ்வொரு நாள் இரவு 9 மணிக்கு நடைபெறும் தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற்று, கடினமாக ஜெபித்து, என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனந்திரும்ப தொடங்கினேன்.

மே 15, 2017 அன்று, ஒரு முக்கிய சபையின் நிகழ்ச்சியின்போது, தைராய்டு நீர்க்கட்டி என்று என் கையில் எழுதினேன். விசுவாசத்தோடு தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகிற அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் கைகுலுக்கினேன். அதுமுதற்கொண்டு, என்னுடைய நீர்க்கட்டி வளரவில்லை. பூரணமாக சுகமடைவதற்காக நான் கடினமாக ஜெபிக்க ஆரம்பித்தேன்.


ஜெபவேளையில், கர்த்தராகிய இயேசுவின் அன்பை இருதயத்தின் ஆழத்திலிருந்து உணரும்படி தேவன் எனக்கு உதவிச் செய்ததால், நான் இடைவிடாமல் கண்ணீர் சிந்தினேன். முழு இருதயத்தோடு ஜெபிக்க பரத்திலிருந்து பெலனைப் பெற்ற எனக்கு ஜெபிப்பது அதிக சந்தோஷத்தை தந்தது; சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தில் அதிக ஊக்கமாய் ஜெபித்தேன். பரிசளிப்பு விழாவில் பரிசையும் நான் பெற்றேன். நான் இப்படியாக மாறினவளாய் ஜெபிக்கத் துவங்கினதால், நீர்க்கட்டி சிறிது சிறிதாக குறைந்துப்போனது. முடிவாக இப்போது கட்டியே இல்லை. அல்லேலூயா!

முன்பு



▲ இடது தைராய்டில் 3 செ.மீ. அளவுடைய நீர்க்கட்டி

# "என் கண்கள் முற்றிலும் குருடாகும் அபாயத்தில் இருந்தேன். ஆனால் ஆவியானவருடைய அக்கினியால் சுகமடைந்தேன்!"



**சகோதரி அசுசினா க்யுவாஸ், வயது 85,**
**அர்ஜென்டினா வீடு சபை**

எனக்கு மோசமான பார்வைத்திறன் இருந்ததால், கண்ணாடி இல்லாமல் என்னால் வாழ்க்கையை நடத்த முடியாது. அவையில்லாமல், அனைத்தும் மங்கலாகத் தெரியும்; வண்ணங்களையும்கூட என்னால் அறிய முடியாது. என் கண்களில் இரணம் உண்டானது, கொஞ்சம் காற்றுப்பட்டாலும் மிகவும் வலிக்கும். அது மிகவும் அசௌகரியமாக இருந்தது.

2018 ஜனவரி மாதத்தின் ஆரம்பத்தில், நான் கண் மருத்துவரைப் பார்த்தபொழுது நான் நினைத்ததைவிட என் பார்வைத்திறன் மோசமாக இருப்பதைப் புரிந்துக்கொண்டேன். மருத்துவர் என் இடது கண் வைரஸால் பாதிக்கப்பட்டு, பார்வையை முற்றிலும் இழந்து கொண்டிருக்கிறது என்றும், இதனால் என்னுடைய கார்னியாவிற்கு பாதிப்பு ஏற்படும் என்றும் சொன்னார். முற்றிலும் குருடாகப் போய்விடும் ஆபத்துள்ளது என எனக்கு சொல்லப்பட்டது.

ஜனவரி 7 அன்று, ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனையில் தலைமை போதகரின் செய்தியை கேட்டேன். "சிலுவையின் செய்தி" என்ற அவருடைய பிரசங்கத் தொடரிலிருந்து கர்த்தர் நம் பரிகாரி என்பதைக் குறித்து கேட்டேன். அந்தச் செய்தி என் இருதயத்தை தொட்டது. தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவரால் கூடாதது எதுவுமில்லை என்பதை நான் அறிந்திருந்தும், சுகத்தைப் பெற உலக வழிமுறைகளை சார்ந்து கொண்டதைக் குறித்து மனந்திரும்பினேன். அந்தப் பிரசங்கத்திற்குப் பின்னர், தலைமை போதகரின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றபோது, அவருடைய வல்லமை ஜெபத்தினால் சுகத்திற்கான விசுவாசம் அருளப்பட்டது.

நான் என் கண்கள்மேல் என்னுடைய கரங்களை வைத்து, ஊக்கமாக ஜெபத்தைப் பெற்றுக் கொண்டேன். அந்த நேரத்தில், ஆச்சரியமான ஒன்றை நான் அனுபவித்தேன். திடீரென்று, திரையிலிருந்து பெரிய அக்கினி ஒன்று வந்து என் கண்களையும் கரங்களையும் சூழ்ந்தது. ஆராதனைக்குப் பிறகு நான் வீட்டிற்கு வந்தேன். என்னுடைய வீட்டின் முன்பகுதியை மிகவும் தெளிவாக என்னால் பார்க்க முடிந்தது எனக்கு ஆச்சரியம் தந்தது; மேலும் என் வீட்டிலுள்ள பொருட்களை மின்விளக்குகள் இயக்காமலேயே தெளிவாக என்னால் பார்க்க முடிந்தது.

அடுத்த நாள் காலையில் என் கண்களைப் பரிசோதனை செய்ய நான் போனேன். அங்கு இருந்த எழுத்துக்கள் எனக்கு தெளிவாகத் தெரிந்ததால், அவற்றை நன்றாக வாசிக்க முடிந்தது. மருத்துவர் ஆச்சரியத்தோடு, "என்ன நடந்தது என்று எனக்குப் புரியவில்லை. உங்களது இடது கண் முற்றிலும் இயல்பாக இருக்கிறது; வலது கண்பார்வையும் அதிகரித்துள்ளது, உங்களுடைய இரண்டு கண்களும் இயல்பான அளவில் இருக்கிறது" என்றார். எனக்கு வயது எண்பதுக்கும் மேல், ஆனாலும் 3மீ தொலைவிலுள்ள பொருட்களை கூட மிகத் தெளிவாக இப்பொழுது என்னால் பார்க்க முடிகிறது. எனக்கு இனி மூக்குக் கண்ணாடி தேவையில்லை.

காலம் நேரத்தை மிஞ்சின அற்புதத்தை நிகழ்த்திய தேவனுக்கு என் நன்றிகளை செலுத்துகிறேன். எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் என் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com